**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,　　　　　　　　　　　　　　　　　　　　தேதி: 02.08.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நாட்டு நல பணித்திட்ட சிறப்பு முகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் நல இயக்குநரகத்தில் செயல்பட்டு வரும் நாட்டு நல பணித் திட்டத்தின் சிறப்பு முகாம் ஆகஸ்ட் 02, 2024 முதல் ஆகஸ்ட் 08, 2024 வரை நடைபெறுகிறது. இதில் இரண்டாம் ஆண்டு பயிலும் 573 தன்னார்வலர்கள் பங்கேற்கின்றனர்.

நாட்டு நலப் பணித்திட்டத்தின் சிறப்பு முகாம் தென்கரை, போளுவாம்பட்டியில் ஆகஸ்ட் 02 ,2024 இன்று 10.00 மணியளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர். வெ.கீதாலட்சுமி அவர்களின் வழிகாட்டுதலின் படி தென்கரையில் இனிதே தொடங்கியது. மாணவர் நல இயக்குநரகத்தின் முதன்மையர் முனைவர் நா. மரகதம் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். திட்டமிடல் மற்றும் கண்காணிப்புத்துறை முன்னாள் இயக்குநர், முனைவர் ஜே. வெங்கட பிரபு, அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

தென்கரை பஞ்சாயத்து தலைவர் திருமதி.மஹாலக்ஷ்மி, தென்கரை செயல் அலுவலர் திரு. பழனியப்பன், மாதம்பட்டி பஞ்சாயத்து தலைவர் திரு.முத்துராஜா மாதம்பட்டி ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் திரு.சி.கிருஷ்ணசாமி அவர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தென்கரை, செல்லப்பன் கவுண்டன்புதூர், சென்னனூர், மதிபாளையம், கரடிமடை, மற்றும் குப்பனூர் ஆகிய கிராமங்களில் சிறப்பு முகாம் நடைபெறும். விவசாயம், கால்நடை வளர்ப்பு, தோட்டக்கலை, மற்றும் பிற துறைகளில் செயல் விளக்கங்கள் ஏற்பாடு செய்யப்படும். சிறப்பு முகாமின் போது தூய்மை இயக்கம், சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய முகாம்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கல்வித் திட்டங்கள் போன்றவைகளுக்கும் கவனம் செலுத்தப்படும்.

இந்த சிறப்பு முகாம் மாணவர் நலத்துறையின் முதன்மையர் முனைவர் நா.மரகதம் அவர்களின் வழிகாட்டுதலின்படி நாட்டு நலப் பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம. பிரகதீஸ்வரன் மற்றும் நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*